DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No. 152/2020**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.செல்வராஜ் **Pw 2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of August 2024.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 2வது சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். மனுப்படி உத்தரவாக கேட்டுக்கொள்கிறேன்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் சம்பவத்தன்று ரோட்டில் செல்லும்போது இந்த விபத்து ஏற்பட்டது. இறந்துபோன நபர் பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தில் வந்தார். Splender plus வாகனத்தில் மோதி கீழே விழுந்துவிட்டார். Splender plus வாகனம் தான் வேகமாக வந்தது. வாகனங்களுக்கு ஏற்பட்ட சேதாரம் என்ன என்பது குறித்து நான் பார்க்கவில்லை. நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை, ஆனால் ஆம்புலன்சில் ஏற்றிவிடும்போது உடன் இருந்தேன். இறந்த நபர் எங்கள் ஊர்க்காரரா என்றால் கிடையாது. கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் செல்வதாக சொன்னார்கள். அதற்கு பிறகு எனக்கு

எதுவும் தெரியாது. என்னுடைய முதல் விசாரணையில் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி ரூபன் இறந்துபோனதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், ரூபனின் தாயார் என்னிடம் மேற்படி விவரங்களை சொன்னார். பொதுவான ஒரு நபர் அறிமுகப்படுத்தி ரூபனின் தாயாரை எனக்கு தெரியும். அப்படி ஒரு நாள் சந்தித்தபோது, ரூபன் இறந்தவிவரத்தை என்னிடம் சொன்னார். சுமார் 5-6 மாதங்களுக்கு முன்னர் தான் ரூபனின் தாயாரை நான் சந்தித்தேன். திருநெல்வேலி மருத்துவமனையில் ரூபன் இறந்துவிட்டதாக என்னிடம் சொன்னார். ரூபன் காயங்கள் ஆறி குணமடைந்து மருத்துவமனையில் இருந்து நல்லமுறையில் விடுவிக்கப்பட்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த 11 மாதங்கள் கழித்து ரூபன் அவரது வீட்டில் இயற்கை மரணம் அடைந்தார் என்றால் சரியல்ல. இறந்துபோன நபரின் குடும்பத்திற்கு இழப்பீடு பெற்றுத்தரவேண்டும் என்பதற்காக நான் பார்க்காத ஒரு சம்பவத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்திற்கு TN-69-R-8478 Splender Plus வாகனத்தை ஓட்டிவந்த 1ம் எதிர்மனுதாரர் நாகராஜன் தான் காரணம் என்றால் சரிதான். அவருடைய கவனக்குறைவும் அஜாக்கிரதையும் தான் விபத்திற்கு காரணம் என்றால் சரிதான். இறந்துபோன ரூபன் இந்த விபத்திற்கு எந்த வகையிலும் காரணம் கிடையாது என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் வைத்து ரூபன் இறந்துவிட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. விபத்திற்கும் ரூபனின் மரணத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு 11 மாதங்கள் கழித்து காசநோயின் காரணமாக தான் ரூபன் அவரது வீட்டில் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

விபத்து தொடர்பாக போலீசார் எந்த பிரிவின் கீழ் குற்ற வழக்கு தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இறந்துபோன நபருக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒம்/-S.மனோஜ்குமார்**
**கூடுதல் மாவட்ட நீதிபதி**
**தென்காசி**